**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.239/2018</u>**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மீனாகுமாரி | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 23.02.2023

**P.W. : 1**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் என் அம்மாவிற்காக பொது அதிகார முகவராக உள்ளேன். என் அம்மாவும் பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் செய்தார்கள் என்றால் 2013ல் ஒப்பந்தம் போடப்பட்டது ஆனால் தேதி ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் செய்யும் சமயத்தில் நான் உடன் இருந்தேன். அந்த கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தத்தை முழுமையாக படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று சொன்னால் ஒரு கோடியே 25 லட்சம்

ஆகும். அந்த தொகையில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது  என்றால் 14 1/2 லட்சம் கொடுக்கப்பட்டது. இரு தொகைகளாக 7 லட்சம் ஒன்றும், 7 1/2 லட்சம் ஒன்றாகவும் கொடுக்கப்பட்டது. அந்த இரு தொகைகளும் கிரைய ஒப்பந்த தேதியிலேயே கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. கிரைய ஒப்பந்தம் செய்யும்போது காலக்கெடு ஏதேனும் நிர்ணயம் செய்தோமா என்றால் அதிகபட்சம் 6 மாதம் என்றும் 3 மாதத்திற்குள்ளேயே முடித்துக் கொடுப்பதாக சொன்னார்கள். கிரைய சொத்தானது கட்டிடமா என்றால் கடை மற்றும் வீடு ஆக உள்ளது. கிரைய ஒப்பந்தம் போட்டவுடனேயே வீட்டை சுவாதீனம் எடுத்தோமா என்றால் எடுக்கவில்லை.  எங்கள் வீட்டிற்கும் கிரைய சொத்து உள்ள வீட்டிற்கும் எவ்வளவு துரம் என்றால் சுமார் 1/2 கிலோமீட்டர் இருக்கும். அந்த கிரைய சொத்தில் ஏற்கனவே TIIC Bank அடைமானத்தில் உள்ளதா  என்றால் உள்ளது. அந்த சொத்து எவ்வளவு அடைமானம் உள்ளது என்ற விவரம் தெரிந்து தான் கிரைய ஒப்பந்தம் செய்தோமா என்றால் அதுபற்றி  தெரியாது.

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**